تاميلي
தமிழ்

مالفرق بين المني والمذي؟وماالحكم إذا أصاب الثوب؟

# 'மனி,மஃதி' இடையில் வித்தியாசம் யாது? ஆடையில் பட்டால் என்ன செய்ய வேண்டும்?


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com WWW.MAHADSUNNAH.COM

## “மனி” (விந்து), ”மஃதி” (இச்சை நீர்) ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசம் யாது? ஆடையில் பட்டால் என்ன செய்ய வேண்டும்?

மனியைப் பொறுத்தவரை அதற்கு மூன்று அடையாளங்கள் உள்ளன:

01. இன்பத்துடன் வெளியேறும் பின்னர் சோர்வு ஏற்படும்
02. வித்தியாசமான வாடை வெளிப்படும்
03. வேகமாக வெளியேறும்.

இதில் ஒன்று காணப்பட்டாலும் அது மனி என்று ஆகிவிடும்.

**மஃதியைப் பொறுத்தவரை:**

அது ஒரு வழுவழுப்பான திரவம், இச்சையின் போது வெளிப்படும், அதனால் இன்பமோ, சோர்வோ ஏற்படாது. ஆண்களை விட பெண்களுக்கு இது அதிகமாக காணப்படும்.

முனி வெளிப்பட்டால் குளிப்பு அவசியமாகும். அது இயல்பாகவோ அல்லது உடலுறவு மூலமோ இருக்கலாம்.

அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் தொடக்கு உள்ளவர்களாக இருந்தால் சுத்தமாகிக் கொள்ளுங்கள். (05:06)

மஃதியைப் பொறுத்தவரை அதைக் கண்டால் வுழூ செய்யவேண்டும். அலி (ரலி) அவர்கள் அதிகம் மஃதி வெளிப்படுபவர்களாக இருந்தார்கள். இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, அதற்காக வுழூ செய்துகொள்ளுமாறு பணித்தார்கள்.

மனி சுத்தமானதா?

ஆம். உலமாக்களின் சரியான கூற்றின் பிரகாரம் அது சுத்தமானது. ஆயிஷா (ரழி) கூறுகின்றார்கள்:

நபியவர்கள் மனியை ஆடையிலிருந்து கழுவிவிட்டு பின்னர் அந்த ஆடையுடன் தொழுகைக்கு செல்வார்கள். (முஸ்லிம்:289)

இன்னொரு அறிவிப்பில்:

காய்ந்த மனியை நபியின் ஆடையிலிருந்து நான் சுரண்டி விடுவேன், அந்த ஆடையுடன் அவர்கள் தொழுவார்கள். (முஸ்லிம்:288)

மஃதியைப் பொறுத்தவரை அது நஜீஸ் ஆகும். ஏனெனில் நபியவர்கள் அது பட்ட இடத்தையும், மறைவிடத்தையும் கழுவமாறு பணித்தார்கள்.

மேலும் மனி சுத்தமானது என்பதால் ஆடையில் பட்டால் ஆடை அசுத்தமாகாது. அதனுடன் தொழுதால் தவறில்லை.

மாமேதை இப்னு குதாமாஃ கூறுகின்றார்கள்:

நாம் மனி சுத்தம் என்று கூறினாலும் அது காய்ந்து விட்டால் சுரண்டி விடுவது விரும்பத்தக்கது. அவ்வாறின்றி தொழுதாலும் பிரச்சினை இல்லை.

**மஃதியை சுத்தம் செய்ய அது பட்ட இடத்தில் நீரைத் தெளித்தால் போதுமானது.**

சஹ்ல் பின் ஹுனைஃப் (ரழி) கூறுகின்றார்கள்: எனக்கு மஃதி அதிகம் ஏற்படும், அதிகமாக குளிப்பேன். எனவே, நபி (ஸல்) அவர்களிடம் அது பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள் உனக்கு வுழூ மாத்திரம் போதுமானது என கூறினார்கள். அப்போது ஆடையில் பட்டால் என்ன செய்வது? என நான் கேட்டேன். அதற்கு நபியவர்கள் கூறினார்கள் : கையால் நீரை எடுத்து அதன்மேல்

தெளித்து விடு அது உனக்குப் போதுமானது.
(இப்னு மாஜஹ்:506)